(முழுப் பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

தரம் 5

# மூன்றாம் தவணை இறுதிக் கணிப்பீடு - 2023 (2024)

புள்ளி

## தமிழ் மொழி

சுட்டெண் : ..............................

நேரம் : 1:00 மணித்தியாலம்

01. சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) "தளை" என்பதன் பொருள்,
   1) சிபக  2) கட்டு  3) செழிப்பு

2) பின்வரும் சொற்களில் தொழிற் பெயர்ச் சொல்,
   1) வரைந்தான்  2) ஓடியது  3) ஆடுதல்

3) "தாரம்" என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
   1) மனைவி  2) மகள்  3) தாய்

4) எதிர்கால தன்மைப் பன்மை வினைமுற்று சொல்,
   1) படித்தோம்  2) ஓடுவேன்  3) விளையாடுவோம்

5) "இளைஞன்" என்பதன் எதிர்ப்பாற் சொல்,
   1) இளைஞி  2) இளையவன்  3) யுவதி

6) "காட்டுத்தீ போல" எனும் உவமைத்தொடரின் கருத்து,
   1) மிக ஒற்றுமை  2) வேகமாகப் பரவுதல்  3) வழிகாட்டுதல்

7) "கனவு நனவு" என்பது ஓர்,
   1) அடுக்குத்தொடர்  2) இணைமொழி  3) இரட்டைக் கிளவி

8) நெஞ்சு .............................. என இருந்தது. வெற்றிடத்தில் வரவேண்டிய இரட்டைக்கிளவி,
   1) கனகன  2) பளபள  3) படபட

9) "ஆசை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
   1) நிராசை  2) பேராசை  3) வெறுப்பு

10) 'வெள்ளைக் கொக்கு சிறிய மீன்களைக் கொத்தித் தின்றது." எனும் வாக்கியத்தில் வந்துள்ள வினை அடைமொழி,
   1) வெள்ளை  2) கொத்தி  3) சிறிய

(10 × 2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

02. வேறுபட்ட சொற்களின் கீழ்க் கோடிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) கர்வம் | செருக்கு | பெருமை | அசல் | |
| 2) வையகம் | விண் | பூமி | பார் | |
| 3) வனம் | அடவி | கானகம் | நாடு | (3 × 2 = 06 புள்ளிகள்) |

03. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1) வெங்காயத் தோலை (உரி / உறி) க்கும் போது கண்களில் இருந்து கண்ணீர் வடியும்.
2) மாதா, பிதா, குரு, தமையன், அரசன் ஆகியோர் ஐங் (குறவர் / குரவர்) என அழைக்கப்படுவர். (2 × 2 = 04 புள்ளிகள்)

04. பின்வரும் சொற்களுக்கு பொருத்தமான எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.

1) உழவன் - .................................... 2) விதவை - ....................................
3) வேடன் - .................................... (3 × 2 = 06 புள்ளிகள்)

05. பின்வரும் சுருக்கக்குறியீடுகளின் விரிவை எழுதுக.

1) இ.ம.வ. - ....................................................................................................
2) இ.பெ.கூ - ....................................................................................................

(2 × 2 = 04 புள்ளிகள்)

06. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் அறிவித்தலா? அறிவுறுத்தலா? கட்டளையா? என எதிரே உள்ள அடைப்பினுள் எழுதுக.

1) சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக. (..................................)
2) இன்று இடியுடன் கூடிய மழை பெய்யும். (..................................)
3) முன்னோக்கி ஓடி வாருங்கள். (..................................)

(3 × 2 = 06 புள்ளிகள்)

07. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.

1) பண்டிகைக்கும் / அதற்கே / ஒவ்வொரு / உரித்தான / காணப்படுகின்றன / வரலாறுகள்

....................................................................................................

....................................................................................................

2) நாம் / பொலிதீன் / சூழல் / பாவனையால் / வாழும் / பாதிப்படைகின்றது

....................................................................................................

....................................................................................................

(2 × 3 = 06 புள்ளிகள்)



kalvi.lk

08. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1) குயில் கூவும் என்பது போல மயில் (அலறும் / அகவும்)

2) பூனைக்கு கடுவன் என்பது போல நண்டுக்கு (அலவன் / குண்டு)

3) அவர் தனது மகன் செய்த குற்றத்தை (கைகொடுத்தார் / பூசிமெழுகினார்)

4) நாம் எப்போதும் (உயர்வு தாழ்வு / பாலூந்தேனும்) பார்க்கக் கூடாது.

5) கமலா தனது நண்பனின் காதுக்குள் (சிடுசிடு / குசுகுசு)த்தாள்.

(5 × 2 = 10 புள்ளிகள்)

09. பின்வரும் பந்தியை வாசித்து அதனைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் கல்வியிற் தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்கு காரணமாக அமையும் நூல்களை நாம் கண்களைப் போன்று பேணிக் காப்பது எமது கடமையாகும். எனவே, நூல் நிலையங்களில் உள்ள நூல்களை கிழிக்காமலும் சிதைக்காமலும் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

1) ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் எதில் தங்கியுள்ளது?
: ..........................................

2) ஒரு நாட்டின் பெருமையை ஈட்டுவதற்குக் காரணமாக அமைந்த நூல்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்? : ..........................................

3) "சிறுமை" என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக. : ..........................................

4) "கவனமாக" எனும் கருத்தை தரும் சொல்லை எழுதுக. : ..........................................

5) தன்மைப் பன்மை எதிர்கால வினைச்சொல்லை எழுதுக. : ..........................................

(5 × 2 = 10 புள்ளிகள்)

10. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

1) முத்தமிழ் என்பது இயல் இசை நாடகம் என்பனவாகும்

2) தம்பி பயணம் செய்த பேருந்து விபத்துக்குள்ளாகிவிட்டது (2 × 2 = 04 புள்ளிகள்)

11. பின்வரும் தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச் சொல்லை புள்ளிக் கோட்டில் எழுதுக.

1) பகை அரசருக்கு கொடுக்கப்படும் காணிக்கை - ..........................................

2) நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவர் - ..........................................

(2 × 2 = 04 புள்ளிகள்)



kalvi.lk

12. பின்வரும் கருத்துக்களை உணர்த்தும் பழமொழிகளை எழுதுக.

1) சிறுவயது பழக்கம் நீங்காது.

..............................................................................................................................

2) மானத்துடன் வாழவேண்டும்.

..............................................................................................................................

(2 × 2 = 04 புள்ளிகள்)

13. பின்வரும் தனிவாக்கியத்தை தொடர் வாக்கியமாக்கி எழுதுக.

குமார் குளக்கரைக்குச் சென்றான்.
குமார் தூண்டிலில் மீன் பிடித்தான்.

..............................................................................................................................

..............................................................................................................................

(1 × 2 = 02 புள்ளிகள்)

14. சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.

1) அறிவியலாலர் / அறிவியலாளர் / அறிவியளாளர்

2) நட்ச்சத்திரம் / நட்சத்திரம் / நற்சத்திரம்

3) வானூர்த்தி / வாணூர்தி / வானூர்தி

4) ஆராய்சி / ஆராய்ச்சி / ஆராட்சி (4 × 2 = 08 புள்ளிகள்)

15. "வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள்" எனும் தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொல்லுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.

1) ..............................................................................................................................

..............................................................................................................................

2) ..............................................................................................................................

..............................................................................................................................

3) ..............................................................................................................................

..............................................................................................................................

(3 × 2 = 06 புள்ளிகள்)



kalvi.lk